# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்குமாகாணம்
## Provincial Department of Education – Northern Provi

### இரண்டாம் தவணைப்பரீட்சை 2022

| | | |
|---|---|---|
| தரம் :- 10 | தமிழ்மொழியும் இலக்கியமும் III | நேரம் :- 2 மணித்தியாலம் |
| சுட்டெண்:.............................. | 22 \| T \| III | |

**கவனிக்க**
- அறிவுறுத்தலுக்கேற்ப **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- **1,2,3,4** ஆகிய வினாக்களுக்கும் **5,6,7** வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.
- இவ்வினாத்தாளுக்குரிய புள்ளிகள் 80 ஆகும்

1. கதிகள் யாவும் தருமென லோர் ந்திடார்
   கண்ணி லாதவர் போலத் திகைப்பர் காண்
   (அ) **'கதிகள்'** என்றால் என்ன?
   (ஆ) இங்கு இடம்பெற்ற **உவமானம்** யாது?

**2.** 'அவள் சொன்னது இவருக்குப் புரியவில்லை. இவர் சொன்னது அவளுக்குப் புரியவில்லை
   (அ) '**அவள் சொன்னது** என்ன?
   (ஆ) '**இவர்** எனக்கூறப்பட்டவர் யார்?

3. கணக்காய ரில்லாத வூரும் பிணக்கறுக்கு
   மூத்தோரை யில்லா வவைக்களனும
   (அ) **பிணக்கறுக்கும்** என்ற தொடரைச் சந்தி பிரித்தெழுதுக?
   (ஆ) **மூத்தோர்** எனப்பட்டோர் யார்?

4. 'கழியும் பிழைபொருள் தள்ளி நன்னூலாங் கடலினுண்டு
   வழியும் பொதிகை வரையினிற் கால் கொண்டு வண்கவிதை
   (அ) **'நன்னூலாங் கடலினுண்டு'** என்பதால் கூறப்படுவது யாது?
   (ஆ) **'கால்'** என்பதன் கருத்து யாது?

5. கைதேர்ந்த நிபுணர்கள் போல புதிய தலைமுறை கணிப்பொறி பற்றி நீண்ட விவாதங்களும் பட்டிமன்றங்களும் நடத்தினார்கள்
   (அ) **'தலைமுறை'** என்றால் என்ன?
   (ஆ) '**பட்டிமன்றம்**' என்றால் என்ன?

6. கானவர்கள் விழியெறிந்து வானவரை அழைப்பர்
கவன சித்தர் வந்து வந்து காயசித்தி விளைப்பர்
(அ) **வானவர்** எனப்பட்டோர் யார்**?**
(ஆ) **'கவனம்'** என்ற தொடர் குறிக்கும் கருத்து யாது?

7. எனக்கு இந்தக் கதையை ஆயிரம் முறை சொன்னவர்கள், கூட்டத்தைக நேரிற் கண்ணாற் கண்டவர்களும், அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர்களும்….
(அ) **எனக்கு** என்பதால் கூறப்பட்டவர் யார்?
(ஆ) அக்கூட்டத்தோடு தொடர்புபட்டவர் **யார்**?

8. வெங்கட் பிறைக்கும் கரும்பிறைக்கும்
மெலிந்தப் பிறைக்கும் விழிவேலே
(அ) **வெங்கட்பிறை** எனப்பட்டது எதனை?
(ஆ) **மெலிந்து** என்பது குறிக்கும் பொருள் யாது?

9. நாதம் மூன்றுரு வான குற்றால
நாதராரிய நாடெங்கள் நாடே
(அ) **'நாதம்'** என்பது குறிக்கும் கருத்து யாது?
(ஆ) **'மூன்றுரு** என்பதால் கூறப்பட்டோர் யார் ?

10. அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்
(அ) **'அறிந்தறிந்தும்'** என்ற தொடர் குறிக்கும் கருத்து யாது?
(ஆ) **'வால்குழைக்கும்'** என்ற மரபுத்தொடரின் கருத்து யாது?

(1x2=20 புள்ளிகள்)

2. **பின்வரும் செய்யுட் பகுதியையும் உரைப் பகுதிகளையும் வாசித்து அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

(i) அடக்கம் உடையார் அறிவிலர் என்று எண்ணிக்
கடக்கக் கருதவும் வேண்டா – மடைத்தலையில்
ஓடுமீன் ஓட உறுமீன் வருமளவும்
வாடி இருக்குமாம் கொக்கு

அ) அறிவிலார் வாழ்வு எத்தகையது
ஆ) அறிவுடையோரின் சிறப்பை வெளிப்படுத்தக் கையண்ட உத்தியைக் குறிப்பிடுக

(ii) சூழு மாய வுலகினிற் காணுறுந்
தோற்றம் யாவையும் மானத மாகூமால்
ஆழு நெஞ்சகத் தாசையின் றுள்ளதேல்
அதனு டைப்பொருள் நாளை விளைந்திடும்
தாழு முள்ளத்தர் சோர் வினர், ஆடுபோல்
தாவித் தாவிப் பலபொருள் நாடுவோர்,
வீழு மோரிடை யூற்றினுக் கஞ்சுவோர்
விரும்பும் யாவும் பெறாரிவர் தாமன்றே

அ) 'நாளை விளைந்திடும்' என்ற தொடர் வெளிப்படுத்தி நிற்கும் கருத்து யாது

ஆ) பலபொருள் நாடுவோரின் இயல்பு எத்தகையது

(iii) ஓர்தட்டிலே பொன்னும் ஓர் தட்டிலே நெல்லும் ஒக்கவிக்கும்
கார்தட்டிய பஞ்ச காலத்திலே தங்கள் காரியப் பேர்
ஆர்தட்டினும் தட்டு வராமலே அன்னதானத்துக்கு
மார்தட்டிய துரைமால் சீதக்காதி வரோதயனே

அ) கொடி பஞ்ச காலம் எவ்வாறு வெளிப்டுத்தப்பட்டுள்ளது?

ஆ) '**தட்டு வராமலே**' என்ற தொடர் குறிக்கும் கருத்துக்கள் இரண்டு தருக யாது?

(iv) நாவலர் அவர்கள் அன்று தலைமை வகிக்கவில்லை. அந்த வித்தியாசாலை மண்டபத்தில் ஒரு பக்கத்தில் ஒரு தூணுக்கு அருகில் திண்டுத் தலையணை ஒன்றில் அடிக்கடி சாய்ந்து கொண்டும், மடியிலும் பக்கங்களிலும் அடுக்கிய தலையணைகளில் முழங்கைகளை ஊன்றி உள்ளங் கையினால் நெற்றியைத் தாங்கிக் கொண்டும் கூட்ட நடைமுறைகளை அவதானித்தபடி இருக்கின்றார். நாவலருக்குத் தொய்வு வருத்தம். குளிர் காலத்திலே இடையிடையே வருகின்ற ஒரு வகைக் காசம். மூச்சு விட முடியாது, பேசவியலாது, வயிற்றைக் கொய்து வாங்குகின்ற பொல்லாத வருத்தம் காச வருத்தம்.

அ) நாவலர் கூட்ட நடைமுறைகளை எவ்வாறு அவதானித்தார்?

ஆ) நாவலரின் காச வருத்தம் எவ்வாறானதெனக் கூறப்பட்டுள்ளது?

(iv) இது தவிர இராட்சத கம்பியூட்டர்களும் தனித்தியங்கும் கம்பியூட்டர்களும் இருந்தன. மேசையில் வைப்பது, மடியில் வைப்பது (இது பெண்ணாகத்தான் இருக்க வேண்டும்). கக்கத்தில் வைப்பது இப்படியாகப் பல. தலையில் வைப்பது இன்னமும் வரவில்லை என்றே நினைக்கின்றேன். அது வந்துவிட்டால் பெண்கள் மல்லிகைப்பூ வைப்பதற்குப் பதிலாக இதை வைத்துக்கொண்டு போனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

அ) "**இப்படியாகப் பல**"என்ற தொடர்மூலம் கூறப்பட்ட கம்பியூட்டர்கள் எவை?

ஆ) **தலையில் வைக்கும் கம்பியூட்டர்** பற்றிய கருத்து என்ன?

(5x4=20 புள்ளிகள்)

**3. கம்பியூட்டர்** என்ற சிறுகதையில்

(அ) கதைசொல்லி நியூயோர்க்கின் தூண்டில் கடையில் பட்ட அனுபவத்தையும்

(ஆ) கதைசொல்லி கம்பியூட்டரைக் கொள்வனவு செய்ததையும்

சிறுகதையாசிரியர் **வெளிப்படுத்தும் பாங்கினைத்** தெளிவுபடுத்துக

அல்லது

**நாவலர் எழுந்தார்** என்ற கட்டுரையில்

(அ) நாவலர் குறித்து கட்டுரையாசிரியர் குறிப்பிட வந்த விடயங்களும்

(ஆ) பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளையின் மொழிநடையும்

வெளிப்படும் வகையினை ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துக

(15 புள்ளிகள்)

4.**பாரதியார் சுயசரிதையில்**

(அ) காதலி மீது பாரதியார் கொண்ட ஈடுபாடும்

(ஆ) அதன் போது கையாளப்பட்டுள்ள அணிப் பயன்பாடும்

சித்திரிக்கப்பட்டுள்ள வகையினை விளக்குக

**அல்லது**

**திருக்குற்றாலக் குறவஞ்சியில்**

(அ) மலைவளச் சிறப்பும்

(ஆ) இதன்போது, கையாளப்பட்டுள்ள உயர்வுநவிற்சி அணிப் பயன்பாடும்

இடம்பெற்றுள்ள வயினை ஆதாரங்ளுடன் விளக்குக

(15 புள்ளிகள்)

**5ஆம், 6ஆம், 7ஆம் வினாக்களில் எவையேனும் ஒன்றுக்கு விடை எழுதுக**

5. **தண்டாமரையினுடன் பிறந்தும்** என்ற நீதிப்பாடலில்

(அ) அறிவுடையோர் இயல்பும்

(ஆ) அறிவற்றோர் இயல்பும்

வெளிப்படுத்தப்பட்ட வகையினைத் தெளிவுபடுத்துக

**6. பங்கப்பழனத்து….. என்ற பாடலில்**

(அ) சோழவள நாட்டுச் சிறப்பும்

(ஆ) சோழனின் பெருமையும்

இடம்பெற்றுள்ள வகையினை விளக்குக

**7. தேம்படு பனையின் என்ற நீதிப்பாடலில்,**

(அ) உருவத்தில் பெரியவர் பற்றியும்

(ஆ) உருவத்தில் சிறியவர் பற்றியும்

.

கூறப்பட்டவற்றைத் தெளிவுபடுத்துக

(10 புள்ளிகள்)